# LAABH SAMACHAR

Volume: 11 | Issue : 01 | APRIL 2022 | Tamil & English Monthly | Price: Rs. 10/-

official Publication SOURASHTRA CHAMBER OF COMMERCE


அவோ! மிளோ!! ஹொடோ!!!

**SITCON**

SOURASHTRA INDUSTRIAL TRADE CONFERENCE

2022

## Conference & Exhibition

Conference @ V.S. Chellam Century Hall A/C - Date: 6 & 7.08.2022

Exhibition @ V.S. Chellam Saraswathy Hall A/C - Date: 5, 6 & 7.08.2022

To



SCC Monthly Meet


SCC - Hony. Meet with Madurai Collector Shri. Aneesh Shekar


Interview with Young Women Entrepreneur



SITCON'22 - Steering committee Meet




METRO

அனைத்து வகையான காலணிகள்
மொத்த விற்பனையாளர்கள்

# மெட்ரோ ஷூ மார்ட்



16, அமெரிக்கன் மிஷன் சர்ச் தெரு,
(பெரியார் பஸ் ஸ்டாண்ட் அருகில்)
மதுரை - 625 001.

PH : 23322364, 2331297, 4382343



TEXMO®

Borewell Submersibles
Single Phase Domestic Pumps
Single Phase Jet Pumps

AQUA GROUP

Authorised Dealer:

## Madurai Pipe

76, South Avani Moola Street, Madurai - 625 001. Phone : 0452 - 2621523
B.O.: 32-A, Athikulam Main Road, New Natham Road, Madurai - 625 014.

AQUATEX®

Agricultural Monoblocks
Open-well Submersibles
Pressure Boosting Systems



Borewell Submersibles



Single Phase Jet Pumps



Pressure Boosting Systems



Electric Motors



Single Phase Domestic Pumps



Agricultural Monoblocks



Open-well Submersibles

# பர்வதா டிரேடர்ஸ்

செல்: 94439 30728

Manufacturer: PP Woven Bags
Size: 26/41, 28/46, 38/46, 40/42, 45/50, 50/55, 55/66
(All sizes available)
*Used second hand Woven bags also available



37, கிருஷ்ணாபுரம் காலனி 3வது தெரு, மதுரை - 625014

**உங்கள் உடல்
எடையை பராமரிக்க
குறைக்க / அதிகரிக்க
விரும்புகிறீர்களா?**

- உங்கள் விருப்பமான உணவை தவிர்க்காமல்.
- கடின உடற்பயிற்சி இல்லாமல்.
- பாதுகாப்பு மற்றும் அதிக பயன்.
- உங்கள் குடும்பத்தில் உள்ள அனைவரும் சரியான எடையில் ஆரோக்கியமாக இருக்க

ஆலோசனை பெற அணுகவும்

**L.N.R. தாமோதரன் - 98431 71477**

## SCC BOARD OF MEMBERS 2019-2021

| | | |
|---|---|---|
| K.K. Gnana Prabhakaran | Publisher | 98409 60845 |
| **Past Presidents** | | |
| K.V. Bala | Senior President | 044 2833 0867 |
| C.K. Sekar | Past President | 97900 77111 |
| E.R. Kumaresan | Past President | 93674 66777 |
| K.K.G. Prabhakaran | Past President | 98409 60845 |
| S.K.R. Ramesh | Past President | 96552 34409 |
| M.K. Kaladhar Babu | Imm. Pt. President | 99944 84443 |
| **Office Bearers & EC Members** | | |
| Kumaran B. Jaghuva | President | 99949 26348 |
| T.R. Mohanram | Vice President | 93441 01432 |
| K.K. Dinesh | General Secretary | 98421 16461 |
| V.G. Ramdoss | Overseas Secretary | 93441 00360 |
| T.K.D. Mohan | Treasurer | 98430 52530 |
| K.K. Kubendran | Joint Secretary | 98940 37794 |
| J.S. Sayee Jeevan | Joint Secretary | 90809 51577 |
| S.G. Srinivasan | EC Member | 91500 99456 |
| T.N. Suriyaprakash | EC Member | 93441 52068 |
| A.B. Kumaresh Babu | EC Member | 93443 04980 |
| A.R. Ganesan | EC Member | 98421 75804 |
| B.S. Janaarthanan | EC Member | 97905 75650 |
| G.R. Subramanian | EC Member | 94427 52044 |
| T.K. Sivanath Babu | EC Member | 94423 27081 |
| V.V. Ramlakshmanji | EC Member | 94439 30728 |
| S.M. Karthi Kumaran | EC Member | 94438 31496 |
| N.S. Prem Kumar | EC Member | 99944 35350 |
| T.R. Saravanan | EC Member | 92446 84702 |
| **Advisors** | | |
| K.K. Surendranath | | 98409 88810 |
| K.G. Narayanan | | 93441 03745 |
| K.K. Karunakaran | | 98409 60844 |
| **Editorial Board** | | |
| B.S. Janaarthanan | Chairman | 97905 75650 |
| K.S. Sivakumar | Member | 93441 51331 |
| S.S. Ramsunder | Member | 93441 22181 |
| T.G. Surajlal | Member | 98436 20908 |
| N.R.R. Gopi | Member | 98431 70264 |
| **PRO** | | |
| S.K.B. Chandraprakash | Chairman | 98655 45048 |
| **Patron Members** | | |
| K.K. Surendranath | M/s. Varuni Chemicals | |
| K.S. Ravindranath | M/s. Indowind Energy Ltd., Chennai | |
| M.K. Jawahar Babu | M/s. Jawahar Babu | |
| K.R.M. Niranjan Kumar | M/s. India Ultra Sound, Calicut | |
| E.R. Kumaresan | M/s. V.P.C. Textiles | |
| M.R. Krishnamoorthy | M/s. PT. Kewalram, Indonesia | |
| T.S. Sivaprakash | M/s. Shree Sivabalaji Steels (P) Ltd., | |
| K.B. Mohan | M/s. K.B. Mohan, Engineering | |
| T.L. Dukaram | M/s. Anezlina Cosmos | |
| T.L. Sabari Babu | M/s. Sowbhaagyaas Gold & Diamond | |
| B.V. Ramesh | M/s. Karpagam Motors | |
| T.E. Yogesh | M/s. The Constructive Company | |
| L.G. Padmanabhan Iyer | M/s. Karishma Electro Platers, Mumbai | |




# தலைவர் அறிக்கை

*அஸ்கிதெ ஃகோ மொன்னு பொரெ*

## நமஸ்கார்...

சிட்கான் 2022 மாநாட்டுப் பணிகள் வெகு சிறப்பாக நடைபெற்று வருகின்றன. மாநாட்டின் பிரவுச்சர் விரைவில் வெளியிடப்படும். அங்கத்தினர்கள் அனைவரும் தங்கள் பேராதரவைத் தர வேண்டி கேட்டுக்கொள்கிறேன். மாநாட்டின் ஸ்டால், மலர் போன்றவற்றில், தங்களின் பங்களிப்பை எதிர்பார்க்கிறோம். சமீபத்தில், மதுரை மாவட்ட ஆட்சயிர் திரு. அனீஷ் சேகர் அவர்களை, ஆட்சியர் அலுவலத்திற்கு சென்று நேரில் சந்தித்து சிட்கான் மாநாடு பற்றி கூறி அவரையும் விருந்தினராக அழைக்கும் வாய்ப்பு கிடைத்தது மகிழ்ச்சியளிக்கிறது.

ஸௌராஷ்ட்ர ஆண்கள் மேல்நிலைப்பள்ளி கவுன்சிலில் கடும்போட்டியின் நடுவில் வெற்றி பெற்றுள்ள திரு. டி.ஆர். ரகுநாத் அணியினருக்கு ஸௌராஷ்ட்ர சேம்பர் ஆப் காமர்ஸ் வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறது.

நமது ஸௌராஷ்ட்ர சேம்பர் ஆப் காமர்ஸ்-ன் மூலம் உருவான இளம் தலைமுறை தொழில்முனைவோர் அமைப்பான நெக்ஸ்ட்-ஜென், இரண்டாம் ஆண்டு விழாவை சமீபத்தில் கொண்டாடியது. இன்றைய தகவல் தொழில்நுட்பத்தை திறம்பட உணர்ந்த இளைஞர்கள் நிறைந்த இந்த அமைப்பு அவர்களின் சுறுசுறுப்பும், துடிப்புமிக்க செயல்களின் மூலம், மென்மேலும் வளர வேண்டும் என்று வாழ்த்துகிறேன்.

நன்றி

– குமரன் B ஜகுவா

## திருக்குறள்

**அறிவற்றங் காக்குங் கருவி செறுவார்க்கும்**
**உள்ளழிக்க லாகா அரண்**

**பொருள்:** புத்திசாலித்தந்தான் துன்பம் வராமல் தடுத்துக் கொள்வதற்கு ஆயுதம். அது மனத்துக்குள் இருப்பதானதால் பகைவர்களாலும் புகுந்து அழித்துவிட முடியாத பாதுகாப்பு

**அதிகாரம் 43** **அறிவுடைமை** (புத்திசாலித்தனம்) **அரசியல்**

**Sourashtra Chamber of Commerce**
**Bank Details:**
State Bank of India
City Branch
A/c No: 30134805614
IFSC No: SBIN 0000988

Kindly Save our **Whatsapp** No:
To get our Correspondence,
Business News / Information,
Govt. Notifictions, Amendments,
New Technology etc.,
**93441 97952**

## பொதுச்செயலாளர் அறிக்கை

*அங்கத்தினர்களுக்கு வணக்கம்*

11.03.2022 – **அட்வான்ஸ் டாக்ஸ்**–ன் அவசியம் குறித்து சிறப்புக் கூட்டம் நமது சேம்பர் அரங்கில் நடத்தப்பட்டது. இதில் சிறப்பு விருந்தினராக, வருமான வரித்துறை இணை ஆணையர் திரு. **K.R. சதீஷ் பாபு** அவர்கள் கலந்து கொண்டு பேசினார். உடன், வருமான வரி அதிகாரிகளும் கலந்து கொண்டு பேசினார்கள். இந்த நிகழ்ச்சிக்கு சேம்பர் தலைவர் திரு. **குமரன் B. ஜகுவா** அவர்கள் தலைமைத் தாங்கினார். நிகழ்ச்சிக்குழு சேர்மன் திரு. **T.R. சரவணன்** அவர்கள் நிகழ்ச்சியை ஏற்பாடு செய்தார். நிகழ்ச்சி ஏற்பாட்டிற்கு உதவிய சேம்பர் பட்டயக்கணக்காளர் திரு. **M.T. ஹரிஹரன்** அவர்களுக்கு, நமது சேம்பர் நன்றி தெரிவித்துக்கொள்கிறது.

23.03.2022 – ஜி.எஸ்.டி–யில் உள்ள சில நடைமுறை சிக்கல்களை களைவதற்கு, நமது சேம்பர், மதுரை, ஜி.எஸ்.டி வரி அலுவலகத்திற்கு இது குறித்து கடிதம் அனுப்பியது. இதற்கு உதவிய சேம்பர் செயற்குழு உறுப்பினர் திரு. **S.M. கார்த்தி குமரன்** அவர்களுக்கு நன்றி.

அன்றைய தினம், ஜி.எஸ்.டி.வரி வரி இணை ஆணையராக பதவி ஏற்றுள்ள நமது சமூகத்தைச் சேர்ந்த திரு. **லக்ஷ்மி நாராயணன்** அவர்களை நமது சேம்பர் நிர்வாகிகள் நேரில் சந்தித்து வாழ்த்துகளைத் தெரிவித்தனர்.

28.03.2022 – நமது சேம்பர் தலைவர் திரு. **குமரன் B. ஜகுவா**, உடனடி முன்னாள் தலைவர் திரு. **M.K. கலாதர் பாபு** மற்றும் தொழிலதிபர் திரு. **K.R. ஸ்ரீதர்** ஆகியோர் சேம்பர் சார்பாக மதுரை மாவட்ட ஆட்சியர் திரு. **அனீஷ் சேகர்** அவர்களை மரியாதை நிமித்தமாக நேரில் சந்தித்து சிட்கான் மாநாட்டிற்கு அழைப்பு விடுத்தனர்.

31.03.2022 – மதுரை மாவட்ட ஜி.எஸ்.டி. ஆணையர் திரு. **சிவக்குமார்** அவர்களின் பணிநிறைவுக்கு மரியாதை செலுத்தும் வகையில், சேம்பர் நிர்வாகிகள், நேரில் அவரது அலுவலகத்தில் சந்தித்து, சேம்பர் சார்பாக பொன்னாடை அணிவித்து கௌரவித்தனர்.

05.04.2022 – சிட்கான் 2022 முதல் ஆயத்தக் கூட்டம் மாலை 5 மணி அளவில் நடைபெற்றது. இந்த கூட்டத்திற்கு சேம்பர் துணைத்தலைவரும், சிட்கான் மாநாட்டின் சேர்மன் திரு. **T.R. மோகன்ராம்** அவர்கள் தலைமைத் தாங்கினார். கூட்டத்திற்கு முன்னாள் தலைவர்கள், நிர்வாகிகள், செயற்குழு உறுப்பினர்கள் மற்றும் சிறப்பு அழைப்பாளர்கள் பலர் கலந்து கொண்டனர்.

05.04.2022 – 2022-23ம் ஆண்டின் முதல் மாத கூட்டமாக **How to Conduct Successful Event** என்ற தலைப்பில், மாலை 6.30 மணிக்கு சேம்பர் அரங்கில் நடைபெற்றது. இந்த கூட்டத்திற்கு சிறப்பு விருந்தினராக திரு. **R. சரவணன்** Managing Partner, C2C Services, Madurai அவர்கள் கலந்து கொண்டார். இந்த நிகழ்ச்சிக்கு சேம்பர் தலைவர் திரு. **குமரன் B. ஜகுவா** அவர்கள் தலைமைத் தாங்கினார். நிகழ்ச்சிக்குழு சேர்மன் திரு. **T.R. சரவணன்** அவர்கள் நிகழ்ச்சியை ஏற்பாடு செய்தார்.

– K.K. தினேஷ்

## இதழ்குழுத் தலைவர் அறிக்கை

*அங்கத்தினர்களுக்கு வணக்கம்*

நமது ஸௌராஷ்ட்ர சேம்பர் ஆப் காமர்ஸ்–ன் சிட்கான் மாநாடு வரும் ஆகஸ்ட் மாதம் நடைபெற இருக்கிறது என்பதை தாங்கள் அனைவரும் அறிந்ததே. லாப் ஸமாச்சார் இதழ் சேர்மன் என்கிற முறையில், மாநாட்டு மலர் குழு சேர்மனாக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளேன் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறனே். இந்த முறை, சிட்கான் மாநாட்டு மலரை மேலும் மணம் வீசும் வகையில், டிஜிட்டல் முறையிலும் கொண்டு வர திட்டமிட்டுள்ளோம். அதோடு, ஒவ்வொரு புத்தகத்திலும், வீடியோ வடிவில், மின் புத்தகமாகவும், சமூக வலைத்தளங்களிலும் கொண்டு செல்ல விளம்பரதாரர்களின் விளம்பரமும் திட்டமிடப்பட்டுள்ளது. பல்சுவை தகவல்களுடன் இந்த மாநாட்டு மலர் இருக்கும். ஆகவே, அங்கத்தினர்கள் / விளம்பரதாரர்கள் அனைவரும் இதற்கு ஏகோபித்த ஆதரவுகளைத் தந்து சிட்கான் மாநாட்டு மலரை சிறப்புடன் வெளிக் கொணரக் கேட்டுக்கொள்கிறேன்.

– B.S. ஜெனார்த்தனன்


Exclusive Showroom for U'r Branded Products

IDEAL innerwear | ANAND | Viking | Prithvi INNER WEARS | NAIDU HALL THE FAMILY STORE | JOCKEY INNER WEAR | Poomex | MANGAI NIGHTIES | RASATHE DARLING NIGHTIES | YOKE'S NIGHTY

& All Branded Innerwears for All

Online Purchase for any Items Call 98941 41402 payments by G Pay | PhonePe
Save Your Valuable Time, Money & Healthy Life.

THE BABY SHOP

அலங்கார் தி பேபி ஷாப்

உள்ளாடைகள் உலகம்

280, காமராஜர் சாலை, விளக்குத்தூண், மதுரை - 625 009. அலைபேசி : 98941 41402

HP பெட்ரோல் பங்க் எதிர்புறம், SR காம்ப்ளக்ஸ் பில்டிங், மீனாட்சி நகர், வில்லாபுரம், மதுரை – 625 012. செல் : 98941 41402

https://www.youtube.com/watch?v=CF5XqdbDLsk



# ADVANCE TAX

Advance Tax செலுத்துவதால் கிடைக்கக்கூடிய நன்மைகள் மற்றும் வரி செலுத்துவதை ஊக்குவிப்பதற்கான கூட்டம் கடந்த மார்ச் மாதத்தில், நமது சேம்பர் அரங்கில் 11.03.2022 அன்று நடைபெற்றது. இந்த நிகழ்ச்சியில் பங்கு கொண்ட சிறப்பு விருந்தினர்கள் விபரங்களை கடந்த இதழில் தெரிவித்திருந்தோம். அவர்கள் பேசிய தகவல்களை மட்டும் இந்த இதழில் வெளியிட்டுள்ளோம்.

அதன்படி, இது குறித்து முதலில் பேசிய வருவாய்த் துறை அதிகாரி திரு. **S.B. சூரிய பிரகாஷ்** அவர்கள், அட்வான்ஸ் வரியை ஜூன் 15ல் 15 சதவீதமும், செப்டம்பர் 15ல் 45 சதவீதமும், டிசம்பர் 15ல் 75 சதவீதமும், மார்ச் 15ல் 100 சதவீதமும் கட்டியாக வேண்டும். இந்த அட்வான்ஸ் வரி, வருடம் ரூ.60 லட்சத்திற்கு மேல் வருமானம் ஈட்டும் தொழில் நிறுவனங்களுக்கு பொருந்தும். முன்னதாக, வருமான வரித்துறையில் உருாக்கப்பட்ட அடிப்படை வரிப்பிரிவு அமைப்புகள் பற்றி விவரித்தார். மேற்படி அட்வான்ஸ் வரி, குறிப்பிட்ட சதவிகிதத்திற்கு குறைவாகவோ அல்லது முழுமையாகவோ கட்டத்தவறினால், 234பி மற்றும் 234சி பிரிவுகளில் அபராதம் விதிக்கப்படும். அட்வான்ஸ் வரியை 200%க்கு கட்டினால், 244ஏ பிரிவின்படி, வரித்துறை நமக்கு 6 சதவிகித வட்டியை நமக்கு வழங்குகிறது என்று தெரிவித்தார். மேலும், செல்ப் அஸஸ்மண்ட் வரியை தவிர்த்தால் 234பி மற்றும் 234சி பிரிவு அபராதம் குறையும் என்று தெரிவித்தார்.

வருமான வரித் துறை அதிகாரி திரு. **V. ஆனந்த குமார்** அவர்கள், இந்தியாவில் வரி வருவாயின் நிலை மற்றும் இளைஞர்களிடத்தில் ஏற்பட்டுள்ள வரி செலுத்துவது பற்றிய விழிப்புணர்வு குறித்து அழகாக விவரித்தார்.

நிறைவாக, சிறப்பு விருந்தினராக கலந்து கொண்ட **வருமான வரித்துறையின் இணை ஆணையர்** திரு. **K.R. சதீஷ் குமார்** அவர்கள் பேசுகையில், வருமான வரியின் அவசியம் அதனால் ஏற்படும் தேச நலன் மற்றும் நமக்கு கிடைக்கக் கூடிய பலன்கள் குறித்து மிகத் தெளிவாகப் பேசினார். மேலும், சிறிய அளவில் இருந்த நிறுவனங்கள் சரியாக வரி செலுத்த ஆரம்பித்தப் பிறகு இன்று பெரிய அளவில் உயர்ந்துள்ள சில நிறுவனங்களின் வளர்ச்சி பற்றிய தமது அனுபவங்களை பகிர்ந்துகொண்டார். அதோடு, முந்தைய வரி முறைகள் மற்றும் இன்றைய வரி முறை மாற்றங்கள் குறித்து மிகத்தெளிவாகக் கூறினார். மேலும் டிடிஎஸ் பற்றியும் விவரித்தார். நிறைவாக, அங்கத்தினர்களின் பல்வேறு கேள்விகளுக்கு மிக அழகாக விடையளித்தார்.

# நிகழ்வுகள்



நமது சேம்பர் தலைவர் திரு. குமரன் B. ஜகுவா, உடனடி முன்னாள் தலைவர் திரு. M.K. கலாதர் பாபு மற்றும் தொழிலதிபர் திரு. K.R. ஸ்ரீதர் ஆகியோர் சேம்பர் சார்பாக மதுரை மாவட்ட ஆட்சியர் திரு. அனீஷ் சேகர் அவர்களை மரியாதை நிமித்தமாக நேரில் சந்தித்தனர். சிட்கான் மாநாட்டிற்கு அழைப்பு விடுத்தனர்.



மதுரை மாவட்ட ஜி.எஸ்.டி ஆணையர் திரு. சிவக்குமார் அவர்களின் பணிநிறைவுக்கு சேம்பர் சார்பாக மரியாதை செலுத்த, சேம்பர் இணைச்செயலாளர் திரு. J.S. சாயிஜீவன் மற்றும் செயற்குழு உறுப்பினர் திரு. S.M. கார்த்தி குமரன், ஆகியோர் நேரில் சந்தித்து, பொன்னாடை அணிவித்து கௌரவித்தனர்.



மதுரை, ஜி.எஸ்.டி இணை ஆணையராக பதவி ஏற்றுள்ள நமது சமூகத்தைச் சேர்ந்த திரு. லக்ஷ்மி நாராயணன் அவர்களை நமது சேம்பர் பொதுச் செயலாளர் திரு. K.K. தினேஷ் மற்றும் செயற்குழு உறுப்பினர் திரு. S.M. கார்த்தி குமரன் ஆகியோர் நேரில் சென்று வாழ்த்துக்களைத் தெரிவித்தனர்.



ஜி.எஸ்.டி-யில் உள்ள சில குறைகளுக்கு தீர்வுகாண மதுரை ஜி.எஸ்.டி வரி அலுவலகத்தில் உள்ள உதவி மையத்திற்கு சேம்பர் பொதுச் செயலாளர் திரு. K.K. தினேஷ் மற்றும் செயற்குழு உறுப்பினர் திரு. S.M. கார்த்தி குமரன் ஆகியோர் நேரில் சென்று கோரிக்கை மனுவை அளித்தனர்.

PANDIAN
PERFORMANCE CHEMICALS

# PANDIAN SURFACTANTS PRIVATE LIMITED

57\62,(N.P) 3rd Street, SIDCO Industrial Estate, Ambattur Industrial Estate, Pattravakkam, Chennai-600 098

Home Care ▸ Fabric Care ▸ Personal Care ▸ Skin Care



PANDIAN SURFACTANTS PRIVATE LIMITED

- ALPHA OLEPHIN SULPHONATES
- SODIUM LAURYL ETHER SULPHATES
- SODIUM LAURYL SULPHATES
- CETOSTEARYL ALCOHOLS
- FATTY ALCOHOLS
- OLEO CHEMICALS
- POLYMERS
- PERFORMANCE CHEMICALS &
- FRAGRANCES

Dealers in

Godrej
Godrej Industries Limited

IFF
International Flavours & Fragrace Pvt. Ltd.



K K Dinakaran

www.pandiansurfactants.com / www.pandianfragrances.com

Ph : + 91 44 2642 6202 / 2661 4405 | Cell : 9940960833, 9840960831

# How to conduct SUCCESSFUL EVENT












நமது ஸௌராஷ்டர சேம்பர் ஆப் காமர்ஸ்-ன் 2022-23ம் ஆண்டின் முதல் கூட்டமாக **How to Conduct Successful Event** என்ற தலைப்பில் கடந்த 05.04.2022 அன்று மாலை 6 மணி அளவில் சேம்பர் வளாகத்தில் நடைபெற்றது.

இந்த கூட்டத்திற்கு சிறப்பு விருந்தினராக, திரு. **R. சரவணன்** Managing Partner, C2C Services, Madurai அவர்கள் கலந்து கொண்டு பேசினார். சேம்பர் தலைவர் திரு. **குமரன் B. ஜகுவா** அவர்கள் கூட்டத்திற்கு தலைமை வகித்தார். சேம்பர் நிகழ்ச்சிக்குழு சேர்மன் திரு. **T.R. சரவணன்** அவர்கள் இந்த கூட்டத்தை ஏற்பாடு செய்தார்.

சிறப்பு விருந்தினர் திரு. **R. சரவணன்** அவர்கள், ஒரு பெரிய நிகழ்ச்சி / விழா அல்லது கூட்டத்தை நாம் ஏற்பாடு செய்கிற போது, அதற்கு அடிப்படையில் நாம் செய்ய வேண்டிய செயல்பாடுகள், என்னென்ன என்பது பற்றி மிக அருமையாக கூறினார். அதே போல, அரசு கட்டுப்பாடுகள், பொழுது போக்கு நிகழ்ச்சிக்கான விதிமுறைகள் போன்ற பல்வேறு விபரங்களை அழகாக கூறினார்.

அவரது உரையின் நிறைவுக்குப்பிறகு, நமது ஸௌராஷ்ட்ர சேம்பர் சார்பாக நினைவுப் பரிசு வழங்கி கௌரவிக்கப்பட்டார். இதனை, சேம்பர் சிறப்பு அழைப்பாளர், பரமக்குடி திரு. **D.R.வாசுதேவன்** அவர்கள் வழங்கினார்.

கூட்டத்தின் நிறைவாக,சேம்பர் பொதுச் செயலாளர் திரு. **K.K. தினேஷ்** அவர்கள் நன்றி நவில, கூட்டம் இனிதே நிறைவு பெற்றது. சேம்பர் செயற்குழு உறுப்பினர் திரு. **S.M. கார்த்தி குமரன்** அவர்கள் இந்த கூட்டத்திற்கு அறுசுவை இரவு உணவு விருந்து ஏற்பாடு செய்திருந்தார். அவருக்கு நமது சேம்பர் நன்றி தெரிவித்துக்கொள்கிறது.

**Sowndarya Traders**

*Dealers : Recron, Sleepwell, Suham, Glory, Centuary*

T.G. Suraj Lal D.T.Tech
Mobile : 98436 - 20908
97869 - 48733



WASHABLE :
★ FANCY CURTAIN CLOTHS ★ BABY - PRODUCTS ★ PILLOWS, BEDS
★ BOLSTERS ★ CUSHIONS ★ QUILTS

57-A, Navabathkana Street, Madurai - 1.
Ph : 0452-4374869, E-mail : surajlal75@gmail.com

Dr. S.S.Siva Prasath B.D.S., FGDS.



# Siva Dental Care

## TYPES OF DENTAL CARE




தினசரி காலை 10.00 to 2.00 மணி ★ மாலை 5.30 - 9.00 மணி

243-A, Kamarajar Salai, Near Alankar Theatre, Madurai - 625 009.
Contact : 86086 66642 E-mail : svprsth@gmail.com

# மின்வாரியம் வழங்கும் உயிர்காக்கும் கருவி...

**இதைக் கட்டயாம் பெற வேண்டும் என்கிறார்**
**– நம் சமூக எலக்ட்ரீசியன் கிரீன் திரு. வெங்கடேஷ் என்பவர்**

சமீப காலமாக, வீடு மற்றும் தொழிற்சாலைகளில் புதிதாக மின் இணைப்பு பெருவோருக்கு இ.எல்.சி.பி எனப்படும் (Earth Leakage Circuit Breaker) என்ற கருவி மின்வாரியத்தால் வழங்கப்பட்டு வருகிறது. இந்த இ.எல்.சி.பி. என்பது ஒரு உயிர் காக்கும் கருவி. புதிதாக மின் இணைப்பு பெரும் நுகர்வோர் இதனை அவசியம் பொருத்த வேண்டும் என்று மின்வாரியம் உத்தரவிட்டுள்ளது. அதன்படி புதிய இணைப்பு பெருவோருக்கு மின்வாரியம் வழங்கி வருகிறது.



பொதுவாக, அனைவரது வீடுகளுக்கும் 240 வாட்ஸ் மின்சாரம் சப்ளை செய்யப்படுகிறது. இதில் 40 மில்லி ஆம்ஸ் மின் அழுத்தம் நம் உடலில் பாய்ந்தாலே இருதய துடிப்பு நின்று உயிரிழப்பு ஏற்படும். இதனை தடுக்கவே, இந்த இ.எல்.சி.பி. மின்திறன் கொண்ட கருவி, வீடு மற்றும் அலுவலகங்களுக்கு பொருத்தப்படுகிறது. வீடுகளுக்கு இ.எல்.சி.பி., (40 ஆம்ஸ்) மின்திறன் கொண்ட கருவியையும், திரி பேஸ் மின் இணைப்புகளுக்கு இ.எல்.சி.பி., (63 ஆம்ஸ்) மின்திறன் கொண்ட கருவியையும் பொருத்திக் கொள்ளலாம். இதற்கு ரூ. 3000 வரை செலவாகும்.

இந்த இ.எல்.பி.சி மின் கருவியானது, கூடுதல் மின்திறன்களுக்கு ஏற்ப கிடைக்கின்றன. மின் விபத்து ஏற்பட்ட உடன், பியூஸ் கேரியர், தடை செய்யப்பட்டு மின் வினியோகத்தில் தடை ஏற்படுத்துகிறது. இதனால் அசம்பாவிதம் தவிர்த்து அடுத்த நொடியிலேயே உயிர் காக்கப்படும். மின்வாரியம் மின் இணைப்பு வழங்கும் போதே இந்தக் கருவி பொருத்துவது நல்லது.

SITCON
SOURASHTRA INDUSTRIAL TRADE CONFERENCE 2022

## பிரவுச்சர் வெளியீட்டு விழா

**சமூக முக்கியப் பிரமுகர்களால் வெளியீடு செய்யப்படுகிறது**

**நாள் : 01.05.2022 (ஞாயிறு)**
**நேரம்: மாலை 6.05 மணி**
**இடம் : வி.எஸ். செல்லம் சரஸ்வதி (புளு ஹெவன் அரங்கம்)**

SOURASHTRA CHAMBER OF COMMERCE MADURAI

## நாளிதழ்களில்...


தினமலர்
மதுரை | சனி | 19.3.2022

**மதுரை தொழில் பூங்காவுக்கு வரவேற்பு**

குமரன் பி. ஜகுவா, தலைவர், சவுராஷ்டிரா தொழில் வர்த்தக சங்கம்: மதுரை உட்பட 5 மாவட்டங்களில் தொழில் பூங்கா அமையவிருப்பது, ஸ்டார்ட் அப் துறைகளை ஊக்குவிக்க அந் நிறுவனங்களில் ரூ.50 லட்சம் மதிப்பிலான பொருட்களை தமிழக அரசு துறைகள் கொள்முதல் செய்யும் திட்டம், சிறு, குறு தொழில் வழக்குகளை தீர்க்க வணிக தீர்ப்பாயம், அரசு பள்ளி மாணவர்களுக்கு ரூ.1000 நிதி உதவி, நகர்ப்புறங்களில் 500 பூங்காக்கள் உள்ளிட்ட திட்டங்களை வரவேற்கிறோம்.

தினமணி
சனிக்கிழமை, 19 மார்ச் 2022

சௌராஷ்டிரா தொழில் வர்த்தக சபை தலைவர் குமரன் பி. ஜகுவா: புதிய தொழில் நிறுவனங்களை ஊக்குவிப்பதற்காக, அந்நிறுவனங்களிடம் ரூ.50 லட்சம் வரை கொள்முதல், 7 இடங்களில் வணிகத் தீர்ப்பாயம் அமைப்பது, அரசுப் பள்ளிகள் மற்றும் மாணவர்களை ஊக்குவிக்கும் திட்டங்கள், சுற்றுச்சூழலைக் காக்க புதிய பூங்காக்கள் போன்றவை வரவேற்புக்குரியவை.

## சரக்கு லாரி வாடகை உயர்வு

தமிழகத்தில் பெட்ரோல், டீசல் விலை தொடர்ந்து உயர்வதால் ஏப்ரல் 25 முதல் லாரி வாடகையை 20 சதவீதம் உயர்த்தப் போவதாக மதுரை லாரி உரிமையாளர் சங்கத்தலைவர் தெரிவித்துள்ளார். அவர் கூறியதாவது, கொரோனா ஊரடங்கு தளர்வுக்குப் பின் தொழிற்சாலைகள் சரியாக இயங்காததால் சரக்கு லாரி தொழில் முடங்கியுள்ளது. இந்நிலையில் பெட்ரோல், டீசலுடன் டோல்கேட் கட்டணம் 25 சதவீதம், இன்சூரன்ஸ் ரூ. 5000 உயர்ந்துள்ளதைக் கருத்தில் கொண்டு மதுரையில் உள்ள 300 பார்சல் சர்வீஸ் நிறுவனங்களும் ஏப். 25 முதல் 20 சதவீதமாக உயர்த்தவுள்ளன.



Prop.: B.S. Rajan

• CCTV Camera • Long Distance Monitor • Security Alarm • Digital Video Recorder
• Voice Records • Access Control System • Firm Alarm • Audio & Video Door Phones

*Safety! Security!! Surveillance!!!*

**A TO Z CCTV SYSTEMS**
CCTV Camera Exclusive Showroom

**Head Office :**
No. 45, Kakkathoppu Street,
Town Hall Road, Madurai - 1.
Ph : 0452 - 4377609, 4522633 Cell : 98421 82633

**Branch Office :**
66, Kamarajar Street,
Opp. Keelavasal Bus Stop, Madurai - 9.
Cell : 73737 82633


https://youtu.be/-JMVniVMLr0

# அமெரிக்கா, ஆஸ்ரேலியா, லண்டன், ஜெர்மனி
# மற்றும் அனைத்து வெளிநாட்டு
# விமான டிக்கெட்கள் குறைந்த விலையில்



VH VEDHAVALLI HOLIDAYS

Lufthansa

SINGAPORE AIRLINES

AirAsia

SriLankan Airlines

BRITISH AIRWAYS

CATHAY PACIFIC

QATAR AIRWAYS القطرية

malaysia AIRLINES

Emirates

THAI

spiceJet flying for everyone

एअर इंडिया AIR INDIA

JET AIRWAYS

IndiGo

www.vedhavalliholidays.com

BOOK NOW

99430 31237

Domestic & International Tour Planners | Car Rental | Flight Booking

VH VEDHAVALLI HOLIDAYS

## வேதவல்லி ஹாலிடேஸ்

காமராஜர் சாலை, மதுரை



# COMPLIANCE CALENDER (April 2022 - March 2023)

| Day | April | May | June | July | August | September | October | November | December | January | February | March |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | | | | | | | | | | | | |
| 2 | | | | | | | | | | | | |
| 3 | | | | | | | | | | | | |
| 4 | | | | | | | | | | | | |
| 5 | | | | | | | | | | | | |
| 6 | | | | | | | | | | | | |
| 7 | TCS<br>Payment<br>March 22 | TDS/TCS<br>Payment<br>April 22 | TDS/TCS<br>Payment<br>May 22 | TDS/TCS<br>Payment<br>June 22 | TDS/TCS<br>Payment<br>July 22 | TDS/TCS<br>Payment<br>August 22 | TDS/TCS<br>Payment<br>Sept 22 | TDS/TCS<br>Payment<br>Oct 22 | TDS/TCS<br>Payment<br>Nov 22 | TDS/TCS<br>Payment<br>Dec 22 | TDS/TCS<br>Payment<br>January 23 | TDS/TCS<br>Payment<br>February 23 |
| 8 | | | | | | | | | | | | |
| 9 | | | | | | | | | | | | |
| 10 | GSTR 7/8<br>March 22 | GSTR 7/8<br>April 22 | GSTR 7/8<br>May 22 | GSTR 7/8<br>June 22 | GSTR 7/8<br>July 22 | GSTR 7/8<br>August 22 | GSTR 7/8<br>Sept 22 | GSTR 7/8<br>Oct 22 | GSTR 7/8<br>Nov 22 | GSTR 7/8<br>Dec 22 | GSTR 7/8<br>January 23 | GSTR 7/8<br>February 23 |
| 11 | GSTR 1<br>March 22<br>Monthly | GSTR 1<br>April 22<br>Monthly | GSTR 1<br>May 22<br>Monthly | GSTR 1<br>June 22<br>Monthly | GSTR 1<br>July 22<br>Monthly | GSTR 1<br>August 22<br>Monthly | GSTR 1<br>Sept 22<br>Monthly | GSTR 1<br>Oct 22<br>Monthly | GSTR 1<br>Nov 22<br>Monthly | GSTR 1<br>Dec 22<br>Monthly | GSTR 1<br>January 23<br>Monthly | GSTR 1<br>February 23<br>Monthly |
| 12 | | | | | | | | | | | | |
| 13 | GSTR 1<br>Q4 21-22<br>QRMP<br>GSTR 6<br>March 22 | IFF<br>April 22<br>QRMP<br>GSTR 6<br>April 22 | IFF<br>May 22<br>QRMP<br>GSTR 6<br>May 22 | GSTR 1<br>Q1 22-23<br>QRMP<br>GSTR 6<br>June 22 | IFF<br>July 22<br>QRMP<br>GSTR 6<br>July 22 | IFF<br>August 22<br>QRMP<br>GSTR 6<br>August 22 | GSTR 1<br>Q2 22-23<br>QRMP<br>GSTR 6<br>Sept 22 | IFF<br>Oct 22<br>QRMP<br>GSTR 6<br>Oct 22 | IFF<br>Nov 22<br>QRMP<br>GSTR 6<br>Nov 22 | GSTR 1<br>Q3 22-23<br>QRMP<br>GSTR 6<br>Dec 22 | IFF<br>January 23<br>QRMP<br>GSTR 6<br>January 23 | IFF<br>February 23<br>QRMP<br>GSTR 6<br>February 23 |
| 14 | | | | | | | | | | | | |
| 15 | PF/ESIC<br>Payment<br>March 22 | TCS<br>Return<br>Q4 21-22<br>PF/ESIC<br>Payment<br>April 22 | TDS Certi<br>Q4 21-22<br>Advnce Tax<br>1st Inst<br>AY 23-24<br>PF/ESIC Pmt<br>May 22 | TCS<br>Return<br>Q1 22-23<br>PF/ESIC<br>Payment<br>June 22 | TDS<br>Certificate<br>Q1 22-23<br>PF/ESIC<br>Payment<br>July 22 | Advnce Tax<br>2nd Inst<br>AY 23-24<br>PF/ESIC<br>Payment<br>August 22 | TCS<br>Return<br>Q2 22-23<br>PF/ESIC<br>Payment<br>Sept 22 | TDS<br>Certificate<br>Q2 22-23<br>PF/ESIC<br>Payment<br>Oct 22 | Advnce Tax<br>3rd Inst<br>AY 23-24<br>PF/ESIC<br>Payment<br>Nov 22 | TCS<br>Return<br>Q3 22-23<br>PF/ESIC<br>Payment<br>Dec 22 | TDS<br>Certificate<br>Q3 22-23<br>PF/ESIC<br>Payment<br>January 23 | Advnce Tax<br>4th Inst<br>AY 23-24<br>PF/ESIC<br>Payment<br>February 23 |
| 16 | | | | | | | | | | | | |
| 17 | | | | | | | | | | | | |
| 18 | CMP 08<br>Q4 21-22 | | | CMP 08<br>Q1 22-23 | | | CMP 08<br>Q2 22-23 | | | CMP 08<br>Q3 22-23 | | |
| 19 | | | | | | | | | | | | |
| 20 | GSTR 3B<br>GSTR 5/5A<br>March 22<br>Monthly | GSTR 3B<br>GSTR 5/5A<br>April 22<br>Monthly | GSTR 3B<br>GSTR 5/5A<br>May 22<br>Monthly | GSTR 3B<br>GSTR 5/5A<br>June 22<br>Monthly | GSTR 3B<br>GSTR 5/5A<br>July 22<br>Monthly | GSTR 3B<br>GSTR 5/5A<br>August 22<br>Monthly | GSTR 3B<br>GSTR 5/5A<br>Sept 22<br>Monthly | GSTR 3B<br>GSTR 5/5A<br>Oct 22<br>Monthly | GSTR 3B<br>GSTR 5/5A<br>Nov 22<br>Monthly | GSTR 3B<br>GSTR 5/5A<br>Dec 22<br>Monthly | GSTR 3B<br>GSTR 5/5A<br>January 23<br>Monthly | GSTR 3B<br>GSTR 5/5A<br>February 23<br>Monthly |
| 21 | | | | | | | | | | | | |
| 22 | GSTR 3B<br>Q4 21-22<br>GROUP A | | | GSTR 3B<br>Q1 22-23<br>GROUP A | | | GSTR 3B<br>Q2 22-23<br>GROUP A | | | GSTR 3B<br>Q3 22-23<br>GROUP A | | |
| 23 | | | | | | | | | | | | |
| 24 | GSTR 3B<br>Q4 21-22<br>GROUP B | | | GSTR 3B<br>Q1 22-23<br>GROUP B | | | GSTR 3B<br>Q2 22-23<br>GROUP B | | | GSTR 3B<br>Q3 22-23<br>GROUP B | | |
| 25 | | | | | | | | | | | | |
| 26 | | | | | | | | | | | | |
| 27 | | | | | | | | | | | | |
| 28 | | | | | | | | | | | | |
| 29 | | | | | | | | | | | | |
| 30 | TDS<br>Payment<br>March 22<br>GSTR 4<br>FY 21-22 | TCS<br>Certificate<br>Q4 21-22 | Equalistion<br>Levy Statmt<br>FY 21-22<br>PAN-Aadhar<br>Link with<br>Late Fee 500 | TCS<br>Certificate<br>Q1 22-23 | | Tax Audit<br>AY 22-23<br>DIR-3 KYC | TCS<br>Certificate<br>Q2 22-23 | ITR<br>AY 22-23<br>Transfer<br>Pricing Case | | TCS<br>Certificate<br>Q3 22-23 | | |
| 31 | | TDS Return<br>Q4 21-22 | | TDS Return<br>Q1 22-23<br>ITR<br>AY 22-23<br>Non-Audit | | | TDS Return<br>Q2 22-23<br>ITR (Audit)<br>AY 22-23<br>Trnsfr Pricng<br>Audit<br>AY 22-23 | | Belated/<br>Revised ITR<br>AY 22-23<br>GSTR 9/9C<br>FY 21-22 | TDS Return<br>Q3 22-23 | | PAN-Aadhar<br>Link with<br>Late Fee<br>Rs.1000 |

- Taxation Updates

# GST HSN

## குறியீடு தேடல் - ஓர் உரையாடலில்...

**நபர் 1** : நண்பரே! உங்களுக்கு என்ன பிரச்சினை?

**நபர் 2** : எனது பொருட்களின் HSN குறியீட்டை அறிவது என்பது மிகக்கடினமாக உள்ளது.

**நபர் 1** : GST போர்ட்டலில் HSN செயல்பாட்டைப் பயன்படுத்த முயற்சித்தீர்களா?

**நபர் 2** : நான் கையாளும் பொருட்களுக்கான HSN குறியீடுகளின் 2 இலக்கங்கள் மட்டுமே எனக்குத் தெரியும், ஆனால் எனது விலைப்பட்டியலில் 4/6 இலக்கங்களைக் குறிப்பிட வேண்டும்.

**நபர் 1** : இது வேறுபட்டது. பொருட்கள் மற்றும் சேவைகளின் பொதுவாகப் பயன்படுத்தப்படும் வர்த்தகப் பெயர்கள் மூலம் எளிதாக HSN குறியீடுகளைத் தேடலாம்.

**நபர் 2** : ஆனால், இணையத்தில் கிடைக்கும் இது போன்ற செயல்பாடுகளை நான் முயற்சித்தேன். அவை அனைத்தும் பொருட்கள் அல்லது சேவையின் தொழில்நுட்ப விளக்கங்களில் வேலைசெய்கின்றன. சாதாரண விளக்கத்துடன் எதுவும் செயல்படவில்லை.

**நபர் 1** : நிச்சயமாக, எடுத்துக்காட்டாக, நீங்கள் வெவ்வேறு வகையான காலணிகளைக் கையாள்கிறீர்கள் என்றால், "Search by Description" விருப்பத்தில் 'Shoes' என்று தட்டச்சு செய்தால், கீழ்தோன்றும் பட்டியலில் HSN குறியீடுகளைக் காணலாம். உங்களுக்கு பொருத்தமான ஒன்றைக் கிளிக் செய்யவும்.

**நபர் 2** : உண்மையாகவா?!!!.....

**நபர் 1** : மேலும் நீங்கள் அதிர்ஷ்டசாலி என்றால், உங்கள் தயாரிப்பு தொடர்பான நிறுவப்பட்ட பிராண்ட் பெயர்களைத் தட்டச்சு செய்வதன் மூலம் HSN-ஐப் பெறலாம் மற்றும் அவற்றின் தொழில்நுட்ப விளக்கங்களுடன் தேவையான HSN குறியீடுகளையும் பெறலாம்.

**நபர் 2** : ஆஹா!... மேம்படுத்தப்பட்ட தேடல் HSN அம்சத்தைப் பற்றி நான் வேறு ஏதாவது தெரிந்துகொள்ள வேண்டுமா?

**நபர் 1** : ஆம், மேம்படுத்தப்பட்ட (Search HSN) செயல்பாட்டின் அம்சங்களைப் பற்றி மேலும் அறிய, GST போர்ட்டலின் முகப்புப் பக்கத்தில் "News / Update" பிரிவின் கீழ் கொடுக்கப்பட்டுள்ள விரிவான ஆலோசனையை (Advisory) நீங்கள் பார்க்கலாம்.

**நபர் 2** : ஆஹா!.. அருமை! உடனே நான் பார்க்கிறேன்.

www.gst.gov.in > Services > User Services > Search HSN Code

# Steps to change REGISTERED MOBILE NUMBER in GST Portal

A taxpayer will have to follow the following steps if they intend to update / change the registered mobile number / email address on the GST portal.

**Step - 1:** Login with valid credentials (User ID & Password) on the GST Portal.

**Step - 2:** After logging in from the dashboard, Go to "Services, Click on the "Registration" tab and select the "Non-core amendment".

**Step - 3:** Click on the "Authorized Signatory" tab.

**Sept - 4:** Add a "New Authorized Signatory" and provide the requisite details along with the new mobile number / email address you intend to use in the future.

**Step - 5:** Go to the "Verification" tab & click on "Submit" and log out.

(**Note:** For verification in case of Company & LLP - DSC will be required. For EVC, OTP will be sent to the existing registered mobile number & registered email address).

**Step - 6:** Login again after 15-20 minutes with valid credentials (User ID & Password) on the GST portal.

**Step - 7:** Go to the "Authorised Signatory" tab again by following the below - mentioned path

[ Dashboard > Services > Registration > Non-core amendment > Authorized Signatory ]

**Step - 8:** Now from the list of Authorised Signatories,

- Deselect the checkbox of the existing authorized signatory as "Primary Authorized Signatory"

  and

- Select the checkbox of the newly added authorized signatory as "Primary Authorized Signatory"

**Step - 9:** To save the changes made go to the "Verification" tab & click on "Submit" and log out.

(**Note:** For verification in case of Company & LLP - DSC will be required. For EVC, OTP will be sent to the newly added registered mobile number & newly added registered email address.)



# இளமையில் விளைந்த முதுமையின் சாயல்

அழகான வீட்டை கட்டினால் மட்டுமே போதுமா?... வீட்டினுள் இருக்கும் ஒவ்வொரு பொருளும் கலை நயத்துடன் இருக்க வேண்டும். அது நம் பாரம்பரியத்தை பிரதிபலிக்கும் வகையில், நேர்மறையான சிந்தனையை தூண்டும் வகையில் இருக்க வேண்டும். அந்த வகையில், நாட்டுக்கும் வீட்டுக்கும் அழகு சேர்ப்பவர்கள் 'பெண்கள்'. முக்கியமாக, வீடு என்றால், அதை சுத்தமாகவும், அழகாகவும் வைத்திருக்கும் திறன் படைத்தவள் 'பெண்'.

இன்றைய நவநாகரீக உலகில், அதை மேலும் மெருகூட்டும் வகையில், கலை நயத்துடன், பாரம்பரியத்தை மீட்டெடுக்கும் வகையில் மாற்றியமைக்க முனைப்புடன் கலைப் பொருட்களை தயாரித்து வருகிறார் கட்டிடக் கலை நிபுணர் செல்வி. **பிரத்யூஷா சரவணன்**. இவரது வீட்டுப் பெயர் **தொப்பேன்**. தந்தை பெயர் **சரவணன்**. தாயார் பெயர் **சபிதா**.

தனியாக தொழில் செய்ய வேண்டும் என்கிற வைராக்கியம் உள்ள இளம்பெண் இவர். இன்றைய இளைஞர்களின் முன்னுதாரணமாக திகழும் இவரின் தனிச்சிறப்புமிக்க செயல்களை அறிந்து நமது லாப் ஸமாச்சார் இதழ் குழு கரூரில் வசிக்கும் இவரைச் சந்தித்து பேட்டி கண்டனர்.

இவர் பிறந்த ஊர் மதுரை என்றாலும், பள்ளி மற்றும் கல்லூரி பயின்றது அனைத்தும் கரூர்-ல் தான். பள்ளியில் பயிலும் நாட்கள் முதலே ஓவியம் வரைவதில் தனக்கு மிகவும் ஆர்வம் இருந்ததாகக் கூறுகிறார். அதுவே பின்னாளில், பணிரெண்டாம் வகுப்பிற்குப் பிறகு பொறியியல் கல்லூரியில் ஆர்கிடெக்ட் படிப்பை தேர்வு செய்து, அக்கல்வி அறிவின் மூலம், இத்துறையை தாம் விரும்பி ஏற்றுக்கொண்டு செய்து வருவதாகக் கூறுகிறார்.

2019ம் ஆண்டு கல்லூரிப் படிப்பை முடித்த இவர், 8 மாத காலமே பணிக்குச் சென்றார். இத்துறையில் தனக்கு இருந்து அதீத ஈடுபாடு மற்றும் அவரது தாயார் அளித்த ஊக்கத்தின் காரணமாக அடுத்த இரண்டு வருடத்தில், தனியாக "**சாயல் ஸ்டுடியோ**" என்ற பெயரில் தொழில் துவங்கியுள்ளார்.

**இச்சிறு வயதில், தொழில் துவங்கும் ஆர்வம் எப்படி ஏற்பட்டது** என்பதற்கு, அவர், 'ஒரு தொழிலை ஆரம்பிக்க, தன்னம்பிக்கை, ஆர்வம், அர்ப்பணிப்பு இருந்தாலே போதும், பணம் என்பதை மூலதனப் பொருட்டாகக் கருதத் தேவையில்லை' என்று மிகத்தெளிவான மனதுடன் கூறுகிறார்.

**படித்த முடித்த உடனே தொழிலில் ஈடுபடலாமா?** என்ற கேள்விக்கு, 'இளைஞர்கள் தொழிலுக்கு வரவேண்டும்; கல்லூரிப் படிப்பை முடித்த உடனே தொழிலில் ஈடுபடுதல் என்பது சாத்தியமற்றது. சிறிது காலமாவது நடைமுறை அனுபவத்தை அவர்கள் பெற்றே ஆக வேண்டும். எப்போது, தனியாக நிறுவனத்தை ஆரம்பிப்பது என்பது, அது அவர்கள் தேர்வு செய்துள்ள துறை மற்றும் அனுபவங்களை உள்வாங்கும் திறனைப்



பொருத்தது. அதன்படி, எனது துறை சார்ந்த ஒரு நிறுவனத்தில் பணியாற்றி, அதில் உள்ள கள அனுபவங்களை நன்கு உள்வாங்கி தற்போது தனியாக ஒரு நிறுவனத்தை ஆரம்பித்துள்ளதாகத்' தெரிவித்தார்.

அடுத்ததாக, இவர் ஆரம்பித்துள்ள **இவரது துறையைப் பற்றி**க் கேட்ட பொழுது, 'எந்த மாதிரியான வீடாக இருந்தாலும் சரி அதனை கலைநயத்துடனும், பாரம்பரியத்துடனும் காட்சியளிக்கச் செய்திடவே தாம் கலைப்பொருட்களைத் தயாரிக்கும் இத்துறையைத் தேர்வு செய்துள்ளதாகத்' தெரிவித்தார். 'அதன்படி, உங்கள் வீடு, அலுவலகம் எந்த ஒரு அளவில் இருந்தாலும், அங்கு எந்த மாதிரியான பொருட்களை இடம் பெறச் செய்யலாம். வைக்கப்படும் சின்னஞ்சிறு பொருட்களை எப்படி அழகாக காட்சிப்படுத்த வேண்டும் என்பதைப் பற்றி ஆராய்ந்து அதன் படி வடிவமைத்துத் தருவதே எங்களின் பணியாக' தெரிவித்தார். உதாரணத்திற்கு சில பொருட்களாக, காலண்டர், மேஜை பொருட்கள், கீ செயின், சுவரில் தொங்கவிடப்படும் பொருட்கள், குழந்தைகள் பயன்டுத்தும் பொருட்கள் ஆகியன.

**இத்துறையில் தங்களின் தனிச்சிறப்பு என்ன?** என்ற கேள்விக்கு, 'இன்றைக்கு நாம் இழந்து வரும் மற்றும் இழந்துகொண்டிருக்கும் பாரம்பரிய விஷயங்களை தாம் தயாரிக்கும் கலைபொருட்களில் புகுத்தி இன்றைய இளைஞர்களுக்கு வெளிக்காட்டுவதே' என்று கூறினார். 'இந்நிறுவனத்தில் தயாரிக்கப்படும் பொருட்கள் ஒவ்வொன்றும் பழமையின் 'சாயல்' இருக்கும் என்பதால் தான் தமது நிறுவனத்திற்கு "சாயல் ஸ்டுடியோ" என்ற அர்த்தத்துடன் பெயரை வைத்துள்ளதாக' மகிழ்ச்சியுடன் தெரிவித்தார்.

மேலும் அவர் கூறியதாவது, 'மரத்தினால் செய்யப்படும் பொருட்களே எங்களிடம் அதிகம். வீடு கட்டும் உரிமையாளர்கள் தான் தங்களது பிரதான வாடிக்கையாளர்கள். நிறுவன அலுவலகங்களில் கூட எங்களின் கலைப் பொருட்கள் இடம் பெருகின்றன. அவர்களின் தேவைக்கு ஏற்ப பொருட்களை வடிவமைப்பதே எங்களின் பிரதானப் பணி. 2019-ல் தாம் எடுத்துக்கொண்ட முதல் பணி, "காலண்டர்" தான். வெரும் காலண்டர் என்று கடந்த விட முடியாது, அதில் இடம்பெற்றுள்ள ஒவ்வொரு தகவல்களும், காட்சிப்படுத்தப்பட்டுள்ள பொருட்களும் வேறெங்கும் காண முடியாதது. அனைத்தும், தமது நிறுவனத்தால் கள ஆராய்ச்சி செய்து உருவானது. வருடம் முடிந்த பிறகும் அழகு பொருளாக வீட்டில் / அலுவலகத்தில் வைக்கலாம்.

இந்த ஆராய்ச்சியில், உருவான கருத்துள்ள காலண்டரைத் தான் 2020-ல் கரூர் வைஸ்யா வங்கியின் தலைமை அலுவலகம், தமிழகத்தில், தனது அனைத்து கிளைகளிலும் இடம்பெறச் செய்தது. அதன்மூலம் கிடைத்த வெற்றியைத் தொடர்ந்து கள ஆராய்ச்சிகள் பல செய்து ஒவ்வொரு கலைப்பொருட்களையும் தயாரித்து வருவதாக' பெருமையுடன் தெரிவித்தார்.







**அடுத்தகட்ட நடவடிக்கைகள்?** குறித்து கேட்டதற்கு, ஒவ்வொரு முறையும், ஒவ்வொரு முயற்சியில் புதுப்புது அனுபவம் கிடைக்கிறது. எங்களின் வடிவமைப்புக்கு பிரதான பொருள் 'மரக்கட்டை' தான். அடுத்ததாக, குழந்தைகளுக்கான பொருட்களை வடிவமைத்து வருகிறோம். அவர்களின் நலனுக்காக உடல் ஆரோக்கியம் அளிக்கும் மரக்கட்டைகளை, அதாவது, வேப்பமரக்கட்டைகள் போன்றவை பயன்படுத்த உத்தேசித்துள்ளோம். ஏனெனில், சந்தனக் கட்டையால் பயன்படுத்தப்பட்ட மரப்பாச்சி பொம்மை இன்று சந்தையில் காண்பது அறிது. பிளாஸ்டிக் அல்லது ரசாயனக் கலவையான பொருட்களின் பயன்பாட்டை குறைத்து பாரம்பரிய மற்றும் ஆரோக்கியத்தை மீட்கும் பணியில் தற்போது இருப்பதாகத்' தெரிவித்தார்.

**தங்கள் நிறுவன தயாரிப்புகளை எவ்வாறு சந்தைப்படுத்துகிறீர்கள்?** ' 'இன்ஸ்டாகிராம்' தான் எங்களின் பிரதான சந்தை தளம். அதன் மூலமே பல்வேறு சின்னத்திரை / சினிமா பிரபலங்களின் தொடர்பும் கிடைத்தது அவர்களின் மூலம், பல்வேறு ஆர்டர்களும் கிடைத்து வருகின்றன' என்று தெரிவித்தார்.

**இத்துறையில் போட்டிகள் உள்ளனவா எவ்வாறு எதிர்கொள்கிறீர்கள்?** என்று கேட்டதற்கு, 'இக்கலைத்துறையில் இன்று பலர் கால் பதித்துள்ளனர். ஆகவே இத்துறையில் போட்டிகள் அதிகம் ஆகி வருகின்றன. நாம் அளிக்கும் தயாரிப்பின் தரம் மற்றும் அவர்களை அணுகும் முறையில் தான் போட்டியை சமாளிக்க முடியும். இது மிகவும் கடினமானது. இந்த சூழலை எதிர்கொண்டு செயல்படுவதாக' வைராக்கியத்துடன் கூறி தனது பேட்டியை நிறைவு செய்தார்.

உங்கள் வாழ்த்தை தெரிவிக்க: 96266 54026



# உணவில் கவனம்!...

இன்றைய உலகம், அவசர உலகம். அதற்கேற்றாற் போல் ஃபாஸ்ட் ஃபுட் எனப்படும் துரித உணவு கலாச்சாரம் பெரு நகரங்களை தாண்டி நகரங்களிலும் வேகமாக பரவி வருகிறது. காலில் சக்கரத்தைக் கட்டிக் கொண்டு வேலை என அலையும் இளைஞர்கள் பலர், உட்காருவதற்கு கூட நேரமில்லையா? என குடும்பத்தினர் அங்கலாய்த்தாலும் கூட அதையெல்லாம் காதில் வாங்காமல் நின்றுகொண்டே அரக்க பரக்க சாப்பிட்டு விட்டு பணிக்குச் செல்வார்கள்.

தாங்கள் சாப்பிடுவது என்னவென்று தெரியாமல் சாப்பிடுபவர்களும் இருக்கத்தான் செய்கிறார்கள். வேலைக்குப் போகும் இளம் வயதினர் என்றில்லை, கல்லூரிக்குச் செல்பவர்கள் கூட கடைசி நிமிடம் வரை சும்மா இருந்துவிட்டு, கல்லூரிக்குக் கிளம்பும்போது அவசர அவசரமாகச் சாப்பிட்டுவிட்டு ஓடுகிறார்கள்.

சிலர் உணவு வகைகளைப் பற்றியோ அதன் குணங்களைப் பற்றியோ உணராமல் நாள் முழுவதும் சாப்பிடுபவர்களாக இருப்பார்கள். ஒரு சிலர் ஓய்வு இல்லாத காரணத்தால் உணவு குறித்த சிந்தனையே இல்லாமல் இருக்கிறார்கள். ஒரு சிலரோ எந்த விதமான குறுக்கீடுகளும் இல்லாமல் இதுவரை சாப்பிட்டு இருக்கவே மாட்டார்கள். ஒரு வாய் உணவை சாப்பிடும் பொழுது அவரது உதவியாளர் ஏதோ ஒரு விஷயம் குறித்து அவரிடம் கேட்பார். இதனால் அந்த உணவை அவர் முழுமையாக சாப்பிடக் கூட முடியாமல் போய் விடலாம்.

ஒரு நாளில் ஒருவர் பலமுறை உணவு சாப்பிட்டாலும், பானங்களை குடித்தாலும் எத்தனை முறை உணவை ரசித்து, ருசித்து சாப்பிட்டார்கள் என்றால் அது கேள்விக்குறிதான்.

உணவு உண்ணும் முறை கூட உடலிலும், மூளையிலும், மனதிலும் தாக்கத்தை ஏற்படுத்தும் என்கின்றன ஆய்வுகள். 'மைண்ட் புல் ஈட்டிங்' எனப்படும் ரசித்து ருசித்து சாப்பிடும் முறை உண்மையிலேயே மனதையும் உடலையும் வலுவாக்குகிறது. அத்துடன் உணவுக்கும் மூளைக்கும் இடையே எண்ணற்ற தொடர்புகள் இருப்பதாகவும், மனநலத்திலும் உணவின் தாக்கம் அதிகம் இருப்பதாகவும் பல்வேறு ஆய்வு முடிவுகள் தெரிவிக்கின்றன.

சாப்பிடும்போது அமைதியாகவும் ரசித்தும் சாப்பிடுவதன் மூலம் நரம்பியல் கடத்திகள் சிறப்பாக செயல்பட்டு மூளைக்குத் தேவையான எரிபொருளையும், சக்தியையும் அளிக்கும் என்றும் ஆய்வுகள் தெரிவிக்கின்றன. அத்துடன் ஊட்டச்சத்து மிக்க உணவுகளும் ஏராளமான மனமாற்றத்தை அளிக்கின்றன. மனதுக்குப் பிடித்த உணவுகளை உண்ணும்போது அல்லது காய்கறிகளுடன் உணவு உண்ணும்போது அது மனமகிழ்ச்சியை ஏற்படுத்துவதாகவும் அதன் மூலம் மூளை சுறுசுறுப்பாக இயங்குவதாகவும் ஆய்வுகள் தெரிவிக்கின்றன.

அத்துடன் முறையான உடற்பயிற்சியுடன் சரியான உணவுகளை ரசித்து சாப்பிடுபவர்களால் அறிவாற்றல் மிகுந்த செயல்களை எளிதாகச் செய்ய முடிவதாகவும் ஆய்வுகள் தெரிவிக்கின்றன. இத்தகைய உணவு உண்ணும் முறைகளால் கவலை, மனச்சோர்வு, தூக்கம் போன்றவையும் வேறுபடுவதாகவும் ஆய்வுகள் தெரிவிக்கின்றன.

மன அழுத்தத்தில் இருக்கும்போது சாப்பிட்டாலும் பிஸியாக இருக்கும்போது சாப்பிட்டாலும் அது உடல் ஆரோக்கியத்தை குறைத்து விடும். வேகமாக ஓடும் வாழ்க்கையில் கவனச்சிதறல் மற்றும் குறுக்கீடு இல்லாமல் சாப்பிடுவது என்பது சற்று கஷ்டம்தான். இருந்தபோதும் கிடைக்கும் நேரத்தில் அமைதியாகவும் நிதானமாகவும் சாப்பிடப் பழக வேண்டும்.

உணவின் நிறத்தையும், சுவையையும், அதன் வாசனையும் அனுபவித்துச் சாப்பிடுங்கள். குறைந்த அளவு உணவு எடுத்துக் கொண்டாலும் அதை முழுமையாக நிதானமாகச் சாப்பிடப் பழகுங்கள். இப்படிச் சாப்பிடுவது, உடலின் எடையைக் குறைப்பதற்காக அல்லது கலோரிகளை குறைப்பதற்காக உள்ள முறையல்ல.

உணவு குறித்து முழுமையாகத் தெரிந்து அதனுடைய சுவையை அனுபவித்து, அதனுடன் உணர்வுப்பூர்வமாக கலந்து சாப்பிடுவதே 'மைண்ட் புல் ஈட்டிங்' ஆகும். ஒரு விஷயத்தை நேசித்து செய்தால் நமது மனம் மகிழ்ச்சி அடையும். அதன் மூலம் மூளை சுறுசுறுப்பாக இயங்கும். எந்தச் செயலையும் நன்றாக விரைவாக செய்து முடிக்க முடியும்.

உணவை ரசித்து ருசித்து சாப்பிடுங்கள். சாப்பிடும்போது வேறு எதைப் பற்றியும் சிந்திக்காதீர்கள். பேசிக்கொண்டே சாப்பிடுவது, டிவி, அலைபேசி பார்த்துக்கொண்டே சாப்பிடுவது போன்றவற்றை தவிர்த்துவிடுங்கள். உடல் மட்டுமல்ல, மனநலமும் மேம்படும். – தினமணி



# பெண்கள் தொழில்முனைவோர் பிளாட்ஃபார்ம் - WEP

நாடு முழுவதும் உள்ள வளர்ந்து வரும் & தற்போதுள்ள பெண் தொழில் முனைவோர்களுக்கு நல்ல சுற்றுச் சூழல் அமைப்பை வழங்குவதற்கு NITI AAYOG, பெண்கள் தொழில்முனைவோர் பிளாட்ஃபார்ம் (Women Entrepreneur Platform) WEP அறிமுகப்படுத்தியுள்ளது. இந்த முயற்சியில் உதவுவதற்காக SIDBI ஆனது என்ஜடிஇ உடன் கூட்டு சேர்ந்துள்ளது.

ஒரு செயல்பாட்டு தளமாக, WEP – இச்சா சக்தி, ஞான சக்தி & கர்மா சக்தி ஆகிய மூன்றின் அமைப்பில் அமைக்கப்பட்டுள்ளது.

**இச்சா சக்தி** – ஆர்வமுள்ள தொழில் முனைவோரை தங்கள் தொழிலைத் தொடங்க ஊக்குவிப்பதைக் குறிக்கிறது.

**ஞான சக்தி** – தொழில்முனைவோரை வளர்க்க உதவும் பெண் தொழில்முனைவோருக்கு அறிவு மற்றும் சுற்றுச் சூழல் அமைப்பு ஆதரவு வழங்குவதைக் குறிக்கிறது.

**கர்மா சக்தி** – வணிகங்களை அமைப்பதிலும் அளவிடுவதிலும் தொழில் முனைவோருக்கு கைகோர்த்து ஆதரவை வழங்குவதைக் குறிக்கிறது.

## திட்ட நன்மைகள் மற்றும் சிறப்பம்சங்கள்:

இலவச கடன் மதிப்பீடுகள், வழிகாட்டுதல், பெண் தொழில்முனைவோர்களுக்கான நிதியுதவி, பயிற்சி மற்றும் கார்ப்பரேட் கூட்டாண்மை போன்ற சேவைகளுடன் கூடுதலாக; பரஸ்பர கற்றலை வளர்ப்பதற்கு, தொழில்முனைவோர்கள் தங்கள் தொழில்முனைவோர் பயணங்கள், கதைகள் & அனுபவங்களை பகிர்ந்து கொள்ள WEP ஊக்குவிக்கும்.

WEP பிளாட்ஃபார்ம், மாற்றத்தின் ஒரு உந்துதலாக, கூட்டு நிறுவனங்களுடன் இணைந்து, திறன் வாய்ந்த பெண் தொழில்முனைவோர்கள் மத்தியில் தொழில்முனைவோர் உணர்வை மேம்படுத்துவதற்காக ஆஃப்லைன் முயற்சிகள் மற்றும் அவுட்ரீச் திட்டங்களை ஊக்குவிக்கும்.

மேலும், வெப் இன்குபேஷன் மற்றும் முடுக்கம் ஆதரவை வழங்குகிறது. அதன் பல்வேறு பாட்னர்ஷிப்கள் மூலம் நிறுவப்பட்ட / துணை நிறுவப்பட்ட பெண்களுக்கு வெப் உடன் பதிவுசெய்யப்பட்ட பெண் தொழில்முனைவோரை கையாண்டது மற்றும் அவர்களுக்கு ஸ்டார்ட் அப் செய்வதற்கும் அளவீடு செய்வதற்கும் தேவையான ஆதரவை வழங்குகிறது.

## தகுதி:

1. தங்கள் ஸ்டார்ட் அப்களை தொடங்கி கருத்தியல் நிலையில் இருக்கும் பெண் தொழில்முனைவோர்கள் அல்லது ஸ்டார்ட் அப்களை நிறுவிய பெண் தொழில்முனைவோர்கள் இந்த திட்டத்தின் கீழ் நன்மை பெற பதிவு செய்யலாம்.

2. கார்ப்பரேட்டுகள், என்.ஜி.ஓ-க்கள், ஆராய்ச்சி நிறுவனங்கள், இன்குபேட்டர்கள் போன்றவை எந்த வகையில் வேண்டுமானாலும் பெண் தொழில் முனைவோர்களுக்கு ஆதரவு வழங்கலாம்.

மேலும் விபரங்களுக்கு, தயவுசெய்து https://wep.gov.in என்ற தளத்தில் பார்க்கலாம்.

From 01.04.2022 onwards TDS u/s 194-IA shall be 1% of consideration fro transfer of any immovable property or the stamp duty value of such property, whichever is higher. Refer table.

| TDS u/s 194-IA (From 01.04.2022) | | |
|---|---|---|
| Consideration Value | Stamp Duty Value | TDS |
| 55,00,000 | 60,00,000 | 60,000 |
| 70,00,000 | 60,00,000 | 70,000 |
| 45,00,000 | 60,00,000 | 60,000 |
| 70,00,000 | 48,00,000 | 70,000 |
| 45,00,000 | 48,00,000 | NO TDS |


ASTROLOGER, PALMIST, ACU PUNCTUREIST

OM SHANTI

Cell: 90805 54802, 99424 90217

**Prof. Dr. M.V. SUBBURAMAN**

M.A.(Hin)., M.A.(Phil)., M.A.(Astro)., M.A. (Yoga), M.Ed., M.Phil., M.D.(Acu.)., M.B.A., PGDELT, Ph.D.(Hin)



